


**08.09.2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளைஞர்களின் திறனையும் ஆற்றலையும் முழுமையாக வெளிக்கொணரும் வகையில் தேசிய கல்விக்கொள்கை வகுப்பப்பட்டிருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.

2. வெளிநாடுவாழ் தமிழர்களின் நலனிற்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் நடப்பாண்டு இறுதிக்குள் 2 ஆயிரத்து 250 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

4. வங்கக்கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுவடைந்தது

5. ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>குடியரசு துணைத்தலைவர் தன்கர்</u>

இளைஞர்களின் திறனையும் ஆற்றலையும் முழுமையாக வெளிக்கொணரும் வகையில் தேசிய கல்விக்கொள்கை வகுப்பப்பட்டிருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.

உலக எழுத்தறிவு தினத்தை ஒட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றியஅவர், புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளதாக கூறினார்.

நாட்டின் எழுத்தறிவு விகிதம் 20 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மனிதகுலத்திற்கு சேவையாற்ற விரும்பும் ஒவ்வொருவரும் தங்களது வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒருவருக்கு எழுத்தறிவை போதிக்க உறுதியேற்க வேண்டும் என்றார்.

“பன்மொழி கல்வியை ஊக்குவித்தல், அமைதிக்கும், பரஸ்பர புரிதலுக்குமான எழுத்தறிவு” என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு எழுத்தறிவு தினம் கொண்டாடப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தமது 5 நாள் அரசுமுறை பயணத்தின் முதல்கட்டமாக இன்று சவுதி அரேபிய தலைநகர் ரியாத் சென்றடைந்தார்.

அங்கு நடைபெறும் முதலாவது இந்தியா - வளைகுடா நாடுகளின் ஒத்துழைப்பு குழு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து வரும் செவ்வாய்க்கிழமை ஜெர்மனி தலைநகர் பெர்லின் செல்லும் அமைச்சர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் உயரதிகாரிகளுடன் இருதரப்பு வர்த்தக உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

3-வது கட்டமாக வரும் 12-ம் தேதி ஜெய்சங்கர் ஸ்விட்சர்லாந்து செல்கிறார்.

❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

வரும் 2030-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் 2036-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளை ஏற்று நடத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா முனைப்புடன் மேற்கொள்ளும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஆசிய 44-வது ஒலிம்பிக் குழு கூட்டத்தில் உரையாற்றியஅவர், நடப்பாண்டு மத்திய பட்ஜெட்டில் விளையாட்டு துறைக்கென 3 ஆயிரத்து 100 கோடிரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நாடுகளை ஒன்றிணைக்கும் வகையில் விளையாட்டு போட்டிகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

ஜம்மு காஷ்மீர்

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடவுள்ள 10 அடங்கிய பி.ஜே.பி. வேட்பாளர் பட்டியலை அக்கட்சி இன்று வெளியிட்டுள்ளது.

முதல்கட்ட தேர்தல் வாக்குப்பதிவு வரும் 18-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அங்கு அரசியல் கட்சி தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பி.ஜே.பி. சார்பில் மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு. நிதின்கட்கரி, திரு.மனோகர்லால் கட்டார் உள்ளிட்டோர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

காங்கிரஸ் - தேசிய மாநாட்டு கட்சி கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

3 கட்டங்களாக நடைபெறும் இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்தமாதம் 8-ம் தேதி எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

<u>அல் நஹ்யான்</u>

அபுதாபி இளவரசர் முகமது பின் சையீத் அல் நஹ்யான், 3 நாட்கள் அரசுமுறை பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

மேற்கொள்ளும் அவர் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோருடன் இருதரப்பு உறவுகள், கல்வி, எரிசக்தி, பொருளாதாரம், கலாச்சாரம் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து அவர் ஆலோசனைகளை மேற்கொள்ளவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

வெளிநாடுவாழ் தமிழர்களின் நலனிற்காக பல்வேறு நலத்திட்டங்களை தமிழகஅரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சிக்காகோவில் அமெரிக்கவாழ் தமிழர்களிடையே உரையாற்றியஅவர், புலம்பெயர்ந்த தமிழர்களுக்காக அயலகத் தமிழர் நலவாரியம் உருவாக்கப் பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

ஆண்டுதோறும் ஜனவரி 12-ம் தேதி அயலக தமிழர்நாள் கொண்டாடப்படுவதாக கூறியஅவர், வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக கட்டணமில்லா உதவிமையம் தொடங்கப் பட்டுள்ளதாக கூறினார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களை மேம்படுத்தும் எனது கிராமம் திட்டத்தில் இணைந்து செயலாற்ற முதலமைச்சர் அழைப்பு விடுத்தார்.

கடந்த 3 ஆண்டுகளில் இயற்கை பேரிடர்கள், போர் உள்ளிட்ட சூழல்களிலிருந்து 2 ஆயிரத்து 398 தமிழர்கள் மீட்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

<u>சேகர்பாபு</u>

தமிழகத்தில் நடப்பாண்டு இறுதிக்குள் 2 ஆயிரத்து 250 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் மானூர் அருள்மிகு அம்பலவானர் சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழாவில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாநிலத்தில் இன்று ஒரே நாளில் 55 திருக்கோவில்களில் குடமுழுக்கு நடத்தப் பட்டதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

இதனொரு பகுதியாக விழுப்புரம் ஸ்ரீராதா ருக்மணி சமேத ஸ்ரீ கோகுல கிருஷ்ணர் திருக்கோவில் குடமுழுக்கு விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

<u>சிப்காட்</u>

தர்மபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

462 கோடி ரூபாய் செலவில், ஆயிரத்து 725 ஏக்கர் பரப்பளவில், அமையவுள்ள சிப்காட் பூங்கா மூலம் 18 ஆயிரத்து 300 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>மருத்துவ முதுநிலை படிப்பு</u>

தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டில் சித்தா, யுனானி, ஹோமியோபதி மருத்துவ முதுநிலை படிப்புகளுக்கு மாணாக்கர் இணையதளம் வாயிலாக இன்றுமுதல் வரும் 20-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று இந்திய மருத்துவ ஹோமியோபதி நிறுவனம் அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>இராமநாதபுரம்</u>

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் இராமேஸ்வரம், பாம்பன், தேவிபட்டினம் கடற்பகுதிகளை உள்ளடக்கிய படகு சுற்றுலா திட்டத்தை செயல்படுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

3 மணி நேர பயணத்தில் 50 பேர் பயணம் செய்யும் வகையில் படகுகளை இயக்க விருப்பமுள்ள நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு கடல்சார் வாரியம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>ராமதாஸ்</u>

கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட வேண்டுமென்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இம்மாவட்டத்தில் கனிம வளங்களை வெட்டியெடுக்க வழங்கப்பட்ட உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு அவை சட்டத்திற்கு புறம்பாக வெளிமாநிலங்களுக்கு கடத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டம் கல்லல் வட்டாரத்தில் 200 ஏக்கர் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெறாத அல்லது தேர்ச்சிபெற்று உயர்கல்விக்கு விண்ணப்பிக்கத் தவறிய மாணாக்கருக்கு வழிகாட்டும் வகையில் உயர்வுக்குபடி சிறப்பு முகாம் பெரம்பலூர் தனியார் பள்ளியில் நாளைமறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

கைவினைஞர்கள் பயிற்சிக்கான அகில இந்திய தொழில் தேர்வில் பங்கேற்க விரும்பும் தனித்தேர்வர்கள் **skilltraining.tn.gov.in** இணைய தளத்தில் வரும் 18-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று தேசிய தொழிற்பயிற்சி குழுமம் கூறியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள முதன்மை வேளாண் விரிவாக்க மையங்களில் நாளைமுதல் விவசாயிகளுக்கு டிஜிட்டல் பண பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் வழங்கப்படும் என்று மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

விபத்து

ராமநாதபுரத்தை அடுத்த பிரப்பன் வலசையில் இன்று, நின்றுக் கொண்டிருந்த அரசு பேருந்து மீது கார்மோதிய விபத்தில் காரில் பயணம் செய்த 5 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த இருவர் ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

வானிலை

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது.

இது அடுத்த 24 மணிநேரத்தில் வடமேற்கு திசையில் நகர்ந்து ஒடிசா - மேற்குவங்க கடற்கரை நோக்கி நகரக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர்
திரு. செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

.. வாய்ஸ் ..

இதன்காரணமாக ஆந்திராவில் இன்றும் நாளையும் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனிடையே சென்னை, கடலூர், நாகை பாம்பன், தூத்துக்குடி உள்ளிட்ட துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர் கோப்பை</u>

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் மாநிலம் முழுவதும் நாளைமறுநாள் தொடங்கி வரும் 24-ம் தேதிவரை நடைபெறுகின்றன.

திருப்பத்தூர் மாவட்டத்தில் இப்போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் வைக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பகராஜ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

<u>ஹாக்கி</u>

எட்டாவது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி சீனா ஹுலூன் பியர் நகரில் இன்று தொடங்குகிறது.

வரும் 17-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா, சீனா, மலேசியா, கொரியா, ஜப்பான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு நடைபெறும் போட்டியில் இந்தியா - சீனாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

<u>டென்னிஸ்</u>

**U.S.** ஓப்பன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் இன்று இத்தாலியின் சின்னர் - அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸை எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

<u>பாராலிம்பிக்</u>

பாரீஸில், பாராலிம்பிக் போட்டிகள் வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளுடன் இன்றிரவு நிறைவடைகின்றன.

இதில் இந்தியா சார்பில் வில்வித்தை வீரர் ஹர்விந்தர் சிங், தடகள வீராங்கனை பிரீத்திபால் ஆகியோர் தேசியகொடி ஏந்தி இந்திய வீரர்களை வழிநடத்தி செல்வர்.

இப்போட்டிகளில் இந்தியா இதுவரை 7 தங்கம் 9 வெள்ளி 13 வெண்கல பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 16-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

94 தங்கம், 73 வெள்ளி, 49 வெண்கல பதக்கங்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது.

❖❖❖❖❖❖❖